People's Watch
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

06.04.2016

**ஆந்திரா செம்மரக்கட்டை தடுப்பு சிறப்பு அதிரடிப்படையினரால் 20 தமிழர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டு ஓராண்டு கடந்த பின்பும் தலையீடு செய்யாத தமிழக அரசை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாக கண்டிக்கிறது**

# பத்திரிகைச் செய்தி

கடந்த 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ம் தேதி அன்று திருவண்ணாமலை, தர்மபுரி, சேலம் மாவட்டங்களை சேர்ந்த 20 அப்பாவி தமிழகக் கூலி தொழிவாளர்கள் கூலித் தொழில் செய்வதற்காக ஆந்திரா மாநில சித்தூரில் பேருந்தில் சென்று கொண்டிருந்த போது திட்டமிட்டு புரோக்கர்களைக் கொண்டு தமிழக எல்லைகளில் இருந்து ஆந்திரா எல்லைக்கு ஆந்திரா செம்மரக்கட்டை தடுப்பு சிறப்பு அதிரடிப்படையினரால் கடத்தி செல்லப்பட்டு பின்பு கொடூரமான முறையில் சித்தரவதை செய்யப்பட்டு பின்பு ஷேசாசலம் வனப்பகுதியில் இரண்டு இடங்களில் 07.04.2015 அன்று அதிகாலை சுமார் 3.30 மணி அளவில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நாம் அறிந்ததே.

இக்கொடிய சம்பவத்தினை மக்கள் கண்காணிப்பகம் உயர்மட்ட களஆய்வுக்குழு நேரடியாக ஆந்திரா ஷேசாசலம் வனப்பகுதி, மருத்துவமனை, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரிடம் நேரடியாக சென்று களஆய்வு செய்ததின் அடிப்படையில் தமிழகக் கூலி தொழிலாளர்கள் ஆந்திர மாநில காவல் துறையினரால் கடத்தி படுகொலை செய்யப்பட்ட உண்மை சம்பவத்தினை வெளிக்கொண்டு வந்தது. மேலும் சம்பவத்தின் மூன்று முக்கிய சாட்சிகளையும் கண்டறிந்து தேசிய மனித உரிமை ஆணையத்திடம் ஒப்படைத்தது. தேசிய மனித உரிமை ஆணையத்தில் அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

அதே தினத்தன்று மக்கள் கண்காணிப்பகம், தேசிய மனித உரிமை ஆணையத்தில் புகார் கொடுத்து அதில் ஆஜராகி வாதங்களை முன் வைத்ததன் விளைவாக தேசிய மனித உரிமை ஆணையம் இது வரை எந்த வழக்கிலும் காட்டாத வேகத்தை இந்த வழக்கில் காட்டியது. 28/05/2015 ஆம் தேதி ஆந்திரா அரசு 20 குடும்பத்தினருக்கும் தலா 5 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடும், பட்டியல் பழங்குடியினத்தை சேர்ந்த 13 குடும்பத்தினருக்கு SC/ST சட்டத்தின் கீழ் மேலும் 3 லட்ச ரூபாய் நஷ்ட ஈடும் வழங்க பரிந்துரை செய்தது மேலும் சந்திரகிரி காவல் நிலையத்தில் குற்ற எண் 42/2015, 43/2015, 46/2015 எண்ணுள்ள FIR போடப்பட்டது.

தேசிய மனித உரிமை ஆணையம் தனது பரிந்துரையில் CBI விசாரணை செய்ய வேண்டும் என்றும், இந்த வழக்கில் 3 சாட்சிகளின் வாக்குமூலத்தை குற்றவியல் நடைமுறை சட்டம் 164-ன் கீழ் தமிழ்நாட்டு எல்லைக்குள் உள்ள குற்றவியல் நடுவர் முன் பதிவு செய்ய வேண்டும் என்றும், மூன்று சாட்சிகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும், அவர்கள் வாழும் பகுதியில் உள்ள பஞ்சாயத்து தலைவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் DGP-க்கு உத்தரவும், இறுதியாக ஆந்திரா அரசின் தலைமை செயலாளர், மற்றும் DGP-க்கு ஆணையத்தின் முன் ஜுன் 9 ஆம் தேதி ஆஜராக வேண்டும் என்றும் ஆணையிட்டது.

இந்த பரிந்துரையை ஏற்க மறுத்த ஆந்திரா அரசு ஜுன் மாதம் 4 ஆம் தேதி ஆந்திரா உயர்நீதிமன்றத்தின் முதல் பெஞ்சு முன் தடையாணை பெற்றது. இந்த தடையாணையை நீக்க இன்று வரை தேசிய மனித உரிமை ஆணையம் ஒரு வலுவான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

08/04/2015 அன்று ஆந்திரா சிவில் உரிமைக்குழு சார்பாக ஒரு பொது நல வழக்கு பதிவு செய்யப்பட்டது. அது இன்று வரை நிலுவையில் உள்ளது. அந்த பொது நல வழக்கில் பாட்டாளி மக்கள் கட்சியின் வழக்கறிஞர் பாலு ஒரு குடும்பத்திற்கும் (சசிக்குமார்) ஆந்திராவைச் சேர்ந்த வழக்கறிஞர் சுரேஷ்குமார் 5 குடும்பங்களுக்காகவும், பட்டியல் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த 14 குடும்பங்களின் சார்பாக மக்கள் கண்காணிப்பகமும் வழக்கு தொடுத்து இவ்வழக்கை ஆந்திரா உயர்நீதிமன்றத்தில், மக்கள் கண்காணிப்பகம் நியமித்த டெல்லி வழக்கறிஞர் விருந்தா குரோவர் அவர்களும் ஆந்திராவை சேர்ந்த வழக்கறிஞர் வசுதா அவர்களும் 20 குடும்பங்களின் சார்பாக வாதங்களை முன்வைக்கப்பட்டுள்ளது.

- தமிழகத்தைச் சேர்ந்த 20 கூலித் தொழிலாளர்களை ஆந்திரா செம்மரக்கட்டை தடுப்பு சிறப்பு அதிரடிப்படையினர் சுட்டுப் படுகொலை செய்தது என்பது திட்டமிடப்பட்ட சதியாகும். இந்த சதியின் விளைவாக தமிழகத்திலிருந்து 20 தமிழகக் கூலி தொழிலாளர்கள் ஆந்திர எல்லைக்கு கடத்தப்பட்டு சித்தரவதை செய்து, கொலை செய்யப்பட்டும் ஓராண்டு காலம் மவுனம் சாதிக்கும் தமிழக அரசை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாக கண்டிக்கிறது. தமிழக அரசின் இந்த மௌனமானது, இந்த சதியிலும் பங்குள்ளதா? என்ற பெருத்த சந்தேகத்தை எழுப்புகிறது. வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தினால் தமிழக அரசு தாமதம் செய்யாமல் ஆந்திர உயர் நீதிமன்றத்தில் 20 தமிழர்களுக்காகத் தலையீடு செய்யவேண்டும் என்று மக்கள் கண்காணிப்பகம் கேட்டுக் கொள்கிறது.
- மேலும் இந்த மூன்று முக்கிய சாட்சிகள் அரசின் எந்த ஆதரவும் இல்லாமால் தம் கிராமங்களை விட்டு வேலைக்கு வெளியே எங்கும் செல்லமுடியாமல் பரிதாப நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

- தேசிய மனித உரிமை ஆணையம் இன்னும் தாமதப்படுத்தாமல் ஆந்திரா உயர்நீதிமன்றம் தடையினை நீக்குவதற்கு மூத்த வழக்கறிஞரை நியமனம் செய்து அவசர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கண்காணிப்பகம் கேட்டுக் கொள்கிறது.

கடந்த ஓராண்டு காலமாக வழக்கை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக்குழு இதுவரை தன்னுடைய விசாரணையை முடிக்கவில்லை. இது கண்டிக்கத்தக்கது. சட்டத்தின் ஆட்சியை கேவலப்படுத்துகிறது. இதுவரை நடத்தியிருக்கும் முயற்சிகள் அனைத்தும் ஆந்திரா சிவில் உரிமைக் குழுவின் தலையீடு காரணமாகவும் மக்கள் கண்காணிப்பகம் நியமித்த வழக்கறிஞர் முயற்சியாலும் வழக்குகள் தற்போது முன்னேறி சென்று கொண்டுள்ளது. ஓராண்டு ஆகியும் தன்னுடைய விசாரணையை முடிக்க இயலாத சிறப்புப் புலனாய்வு குழுவை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாக கண்டிக்கிறது.

(ஹென்றி திபேன்)
நிர்வாக இயக்குனர்
மக்கள் கண்காணிப்பகம்

தொடர்புக்கு:
எஸ் பழனியம்மாள்- 99943 68502